# தமிழ்ப் பல்கலைக்கழகச்
# செய்திமலர்

திருவள்ளுவராண்டு 2035 அக்டோபர் 2004


## மகாகவி பாரதியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு

இலக்கியத்துறையின் சார்பில் மகாகவி பாரதியார் அறக்கட்டளைச் சிறப்புச் சொற்பொழிவும் கருத்தரங்கும் 05.10.04 அன்று நடைபெற்றன. துறைத்தலைவர் முனைவர் தா.ஈசுவரபிள்ளை வரவேற்றார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தம் தலைமைஉரையில் மகாகவி பாரதியார் சமூக விழிப்புணர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணிகளை விளக்கியுரைத்தார். முனைவர் சிற்பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் வெளியிட்டுள்ள பாரதி கைதி எண்253 என்ற நூலில் பாரதியார் பற்றிய கருத்துக்கள் இடம்பெறுமாற்றைச் சுட்டிக்காட்டினார். மேலும் பாரதியின் படைப்புக்களில் இடம்பெறும் சமுதாய, பொருளாதார, பண்பாட்டுச் சிந்தனைகளைத் தக்க சான்றுகள் காட்டி விளக்கினார். நிகழ்ச்சியில் பாரதியார் பல்கலைக்கழக முன்னைத் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர், கவிஞர், முனைவர் சிற்பி.பாலசுப்பிரமணியன் அவர்கள் பாரதியின் ஆளுமைஎன்ற பொருண்மையில் இரு சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். பேராசிரியர் சிற்பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் மகாகவி பாரதியார் தாம் எழுதியதைப்போன்றே வாழ்ந்தவர், சமுதாயச் சமத்துவத்தை உருவாக்கல் தமிழ்மொழிப்பற்றூட்டல் ஆகிய இரண்டையும் குறிக்கோள்களாகக் கொண்டவர், நாடு, சமுதாயம், மொழி,தனிமனிதன் விடுதலைக்காகப் பாடுபட்டவர் எனப் புகழாரம் சூட்டினார். பாரதியின் கவிதைகளில் காணப்படும் சொற்கள் ஒவ்வொன்றிலும் வரலாற்றுக் குறிப்புக்கள் இடம்பெறல், சொற்களுக்கு விளக்கம் தருதல், சொற்கள் நேரடியாக மட்டுமன்றி அப்பாலும் பொருள் தரல், கவித்துவம் மிக்க சொற்கள் முதலியவற்றை விளக்கியுரைத்தார். பாரதியார் கவிதைகளில் வெளிப்படும் அவருடைய ஆளுமையைத் தக்க சான்றுகள் காட்டி நிறுவினார். பாரதியின் முப்பெரும் பாடல்களாகிய பாஞ்சாலிசபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு ஆகிய மூன்றையும் பற்றி விரிவாக உரை நிகழ்த்தினார். பிற்பகல் நடைபெற்ற கருத்தரங்க நிகழ்ச்சியில் இலக்கியத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் வ.குருநாதன் அவர்கள் அமர்வுக்குத் தலைமைதாங்கிப் பாரதியின் பாட்டுத்திறம் என்ற பொருளில் ஆய்வுரை வழங்கினார். அகராதியியல் துறைத் தலைவர் முனைவர் பெ.மாதையன் அவர்கள் கண்ணன்பாட்டு என்ற பொருளிலும், இலக்கியத்துறையைச் சார்ந்த முனைவர் பெ.இராமலிங்கம் அவர்கள் பாரதியின் மொழிக்கொள்கை என்ற பொருளிலும், முனைவர் க.திலகவதி அவர்கள் பாரதியின் பார்வையில் பெண் கல்வி என்ற பொருளிலும் ஆய்வுரைகள் வழங்கினர். இலக்கியத்துறை முனைவர் பட்ட ஆய்வாளர் செல்வி அவர்கள் நன்றியுரை வழங்கினார். ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர் துரைமுருகன் அவர்கள் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்.




–முனைவர் தா. ஈசுவரபிள்ளை, இலக்கியத்துறை



## உத்திரப்பிரதேச இல்லம்

தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாகக் கட்டப்பெற்ற உத்திரப்பிரதேச இல்லம் 28.10.2004 அன்று காலை 10.00 மணிக்கு மாண்புமிகு துணைவேந்தர் அவர்களாலும் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்களாலும் குத்துவிளக்கேற்றி இசைத்துறைப் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது. தஞ்சை மருத்துவர் சு.நரேந்திரன் அவர்கள், பதிவாளர் (பொறுப்பு) முனைவர் த.கோ.பரமசிவம், மருத்துவர் சே.பிரேமா, முனைவர் கு.அண்ணாதுரை, தொழில்நுட்பக் கல்விக்கோட்ட செயற்பொறியாளர் திரு எஸ்.கருணாகரன் ஆகியோர் குத்துவிளக்கேற்றிச் சிறப்பித்தனர். இசைத்துறை மாணவியர் யாழ்ப்பாண இசைப் பேராசிரியர் திரு ந.வி.மு.நவரெத்தினம் அவர்கள் தலைமையில் திருமுறைகள் இசைத்தனர். இந்நிகழ்ச்சியினைத் துணைவேந்தரும், ஆட்சிக்குழு உறுப்பினர்களும் பெரிதும் பாராட்டினர்.

–முனைவர் இ.அங்கயற்கண்ணி, இசைத்துறை



# தமிழில் அறிவியல் கலைச்சொற்கள் தரப்படுத்தம்

தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல்தமிழ் வளர்ச்சித் துறை, மைசூர் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்துடன் இணைந்து தமிழில் அறிவியல் கலைச்சொற்கள் தரப்படுத்தம் எனும் பொருண்மையில் 5 நாள்கள் பணியரங்கம் ஒன்றை நடத்தியது. தொடக்கவிழா 12.10.2004 அன்று தமிழ்ப் பல்கலைக்கழக மொழிப்புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் தலைமையேற்றார். அவர்தம் தலைமையுரையில் பேசும்போது, பழந்தமிழ்ச் சொற்கள் புதிய அறிவியல் துறைகளுக்கு ஈடுகொடுத்து வருகின்றன. இந்திய இலக்கிய, இலக்கணங்களில் ஏராளமான கலைச்சொற்கள் உள்ளன. உரையாசிரியர்கள் நிறைய சொற்களைத் தந்துள்ளனர். 9ஆம் நூற்றாண்டிலேயே 12 தொகுதிகளாக நிகண்டுகள் வெளியிடப்பட்டன. உணவு, தொழில், மரம், விலங்கு, பறவைகள் உள்ளிட்டவை குறித்த கலைச்சொற்கள் இவற்றில் இடம்பெற்றுள்ளன. இன்றைய அறிவியல் தொழில்நுட்ப, தகவல்தொழில்நுட்பச் சூழலுக்கு ஏற்ற சொற்கள் தமிழில் உள்ளன. இலக்கிய, இலக்கணங்களில் உள்ள சொற்களைப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு இல்லையெனில் புதிதாகச் சொற்களை ஆக்கிக் கொள்ளவேண்டும். அகராதியில் மட்டுமேசொற்கள் இருப்பதால் பயனில்லை. கலைச்சொற்களை உரிய இடத்தில் பயன்படுத்த வேண்டும் என்றார்.

இப்பணியரங்கத்தின் தொடக்கவிழாவின்போது சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் பொன்.கோதண்டராமன் (பொற்கோ) அவர்கள் சிறப்புரையாற்றினார். அவர்தம் உரையில் தமிழில் அறிவியல் பாடநூல் எழுதக் கட்டாயப் பயிற்சி அளிக்க வேண்டும் என வலியுறுத்தினார். தமிழில் அறிவியல் நூல்களை எழுதும்போது, கலைச்சொல் குறித்த சிக்கல் எழுகிறது. அறிவியல் நூல்களை அதிக எண்ணிக்கையில் தமிழில் எழுத வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டிருந்தால் நாம் முன்னேறியிருப்போம். அறிவியல் நூல்களைத் தமிழில் எழுதும் வானளாவிய முயற்சி 1938ஆம் ஆண்டில் தொடங்கியது. ஏனெனில் அப்பொழுதுதான் பள்ளிகளில் தமிழ்வழிக்கல்வி தொடங்கியது. அதுவரை ஆங்கில வழியில்தான் கல்வி கற்பிக்கப்பட்டது. தமிழ்வழியில் படித்தவர்கள் 1941ஆம் ஆண்டில்தான் முதல் முறையாகப் பள்ளியிறுதி வகுப்புத் தேர்வு எழுதினர். இச்சூழலில் தமிழில் பாடநூல்கள் எழுதும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பயனாகத் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் பல்வேறு பாடநூல்களைத் தமிழில் வெளியிட்டது. தேவைகள் இருக்கும்போதுதான் அதற்கான நூல்கள் வெளிவரும். தற்போது கணிப்பொறி தொடர்பான நூல்கள் நிறைய வெளிவந்து கொண்டிருக்கின்றன. பாடநூல்களில் தரப்படுத்தப்பட்ட கலைச்சொற்களும் பிழையின்றி வெளிவர அதற்கென குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றார்.

விழாவில் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன துணை இயக்குநர் முனைவர் க.ராமசாமி வாழ்த்திப் பேசினார். இந்திய மொழி மொழிப்பட்டியலில் உள்ள 22 மொழிகளில் தமிழில்தான் கலைச்சொல்லாக்க முயற்சி சிறப்பாக நடைபெற்றுள்ளது. ஆனால் மருத்துவப் பட்டப் படிப்புக்கான நூல்கள் தமிழில் இல்லை. இதே போன்று பொறியியல், தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளிலும் நூல்கள் இல்லை.

இந்தப் பணியரங்கத்தில் இரண்டு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். முதலில் துறைவாரியாக இதுவரை தமிழில் வந்துள்ள கலைச்சொற்களைத் தொகுத்துத் திரட்டி இணையம் மூலம் அனைவருக்கும் கொண்டு செல்லும் கடமைநமக்கு உண்டு என்றும் அத்தகைய கலைச்சொற்களைத் தொகுத்துத் தந்தால் அவற்றை இணையத்தில் சேர்ப்பதற்கு ஆகும் செலவை மைசூர் இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம் ஏற்கும் என்றும் தெரிவித்தார். மேலும், அவர் தற்போது தமிழில் உள்ள அறிவியல் பாடநூல்களில் ஏராளமான வாக்கியப் பிழைகள் உள்ளன. பாட நூல்களில் உள்ள பிழைகளைப் பட்டியலிட்டு, இனிமேல் இப்பிழைகள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார். அதற்கான தமிழ்க் கலைச்சொற்களைப் பொறுக்கி எடுக்கச் சில வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்படவேண்டும். அதற்காகக் கலைச்சொல் தர மேம்பாட்டுக்குழு ஒன்றை அமைக்க வேண்டும். அதற்கு ஏற்ற இடம் தமிழ்ப் பல்கலைக்கழகம். அதற்கான உதவிகளைச் செய்ய இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம் தயாராக உள்ளது என்றும் கூறினார்.



## பணியரங்கம்

முன்னதாகத் தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கு.அண்ணாதுரை தமது வரவேற்புரையில் இதுபோன்ற பொருண்மையில் பணியரங்கம் பல இத்துறையில் நடைபெற்றுள்ளன என்றும் அவற்றின் வாயிலாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட கலைச்சொற்கள் தரப்படுத்தப்பட்டிருக்கின்றன எனவும் குறிப்பிட்டார். எனினும் இந்தப் பணியரங்கம், அவற்றிற்கான நெறிமுறைகளைக் கண்டுபிடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

-முனைவர் கு.அண்ணாதுரை, அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறை

## முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு

### அக்டோபர் 2004 இல்...

| ஆய்வாளர் பெயர்/துறை | தலைப்பு | வாய்மொழித்தேர்வு நடைபெற்ற நாள் |
|---|---|---|
| 1. எஸ்.கென்னடி<br>சிற்பத்துறை | காஞ்சி வட்ட மரச்சிற்ப வாகனங்கள் ஓர் ஆய்வு | 06.10.2004 |
| 2. க.வெங்கடரமணன்<br>நாடகத்துறை | தஞ்சை மாவட்டக் கோவில் விழா நாடகங்கள் | 18.10.2004 |
| 3. அ.சபுருன்னிசா<br>இந்திய மொழிகள் பள்ளி | Humanism in Modern English and Indian Fiction--A Comparative Study | 27.10.2004 |

-தமிழ்ப் பல்கலைக்கழகத் தேர்வுப்பிரிவு

# இந்திய மொழிகளில் இலக்கிய வகைகள்




புத்தொளிப் பயிற்சி

தமிழ்ப் பல்கலைக்கழக இந்திய மொழிகள் பள்ளி பல்கலைக்கழக மானியக்குழுவின்நிதி நல்கையுடன் நடத்தும் இந்திய மொழிகளில் இலக்கிய வகைகள் என்ற தலைப்பிலான புத்தொளிப் பயிற்சியின் தொடக்க விழா 01.10.2004 அன்று காலை 11.00 மணியளவில் பல்கலைக்கழக மொழிப்புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. புத்தொளிப்பயிற்சி ஒருங்கிணைப்பாளரும் இந்திய மொழிகள் பள்ளித் துறையின் தலைவருமான முனைவர் வே.சா.அருள்ராஜ் வரவேற்புரை வழங்கினார்கள். முன்னைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா.முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் தம் தலைமையுரையில் தமிழ் செவ்வியல் மொழி ஆவதற்குப் பெற்றிருந்த தகுதிகளை விளக்கிக் கூறினார்கள். உலகச் செவ்வியல் மொழிகள் கிரேக்கம்,லத்தின் உறிப்ரு, சமஸ்கிருதம் போன்றவைகள் என்றும் அவர் மேலும் 2000 ஆண்டுகட்கு முன்பே பாரம்பரியம் உள்ள மொழி தமிழ் என்றும் தமது உரையில் குறிப்பிட்டார். உலக இலக்கியங்கள் பலவும் கடவுளை நோக்கி அமைத்து வழிகாட்டியது. தமிழில் சங்க இலக்கியம் மனிதனைப்பற்றி மட்டுமேபேசுகிறது. அதே போல் உலக இலக்கண நூல்களில் முதன்மையானது தொல்காப்பியம். இப்படி பல சிறப்புகளைக் கொண்ட உயிர்த்துடிப்பான மொழி முதல்தர செவ்வியல் மொழி தமிழ் என்று கூறினார்.

மையக் கருத்துரை வழங்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மைய முன்னை இயக்குநர் பேரா செ.வை.சண்முகம் அவர்கள் தம் மையக் கருத்துரையில் இலக்கிய வகை என்றால் என்ன? என்பது பற்றி விளக்குகையில் படைப்பும் படிப்பும் கலந்தது இலக்கிய வகை என்று குறிப்பிட்டார். ஒரு இலக்கிய வகை உலகம் முழுதும் இருக்கிறது. அது கவிதை. வெவ்வேறு மொழிகளில் உத்திகள் மாறுகின்றன. இந்திய மொழி இலக்கிய வகைகளில் ஒற்றுமை உள்ளது. சங்க இலக்கியப் பாடல்கள் அடிவரையறைகளை மட்டும் வைத்துப் பிரிக்கப்படவில்லை. கருத்துக்களின் அடிப்படையிலும் பிரிக்கப்பட்டுள்ளது. இலக்கிய வகை அறிவுதான் இலக்கியத்தை நன்கு படிக்க உதவும். மேலும் புறநானூற்றின் பாடல் அறப்பாடல் வகையிலும். புறப்பாடல் வகையிலும், பக்திப்பாடல் வகையிலும் அடங்கும் தன்மையுடையது என்றார். விழாவில் மொழிப்புலத்தலைவரும் தத்துவ மைய இயக்குநருமான பேரா. முனைவர் க.பாஸ்கரன் வாழ்த்துரை வழங்கினார். முனைவர் இரா.முரளிதரன் நன்றி கூறினார்.




புத்தொளிப்பயிற்சியின் நிறைவு விழா 21.10.2004 அன்று பல்கலைக்கழக மொழிப்புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. முனைவர் வே.சா. அருள்ராஜ் அவர்கள் வரவேற்றுப் புத்தொளிப்பயிற்சி பற்றிய அறிக்கையினை வாசித்தார். பின்னர் பயிற்சியாளர்களின் சார்பில் முனைவர் ஜே.அந்தோணிப் பிச்சை, ஆர்.சோபா, முனைவர் தண்டபாணி மற்றும் முனைவர் மணிவண்ணன் ஆகியோர் தாங்கள் பயிற்சியில் பெற்ற பயன்களை எடுத்துக்கூறினார்கள். பிறகு மையக் கருத்துரை வழங்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநர் முனைவர் பேரா.ச.வே.சுப்பிரமணியன் அவர்கள் தம் உரையில் இந்திய மொழிகள் எல்லாம் சிறந்தவை. ஆனால் தமிழ் அவைகளில் இருந்து பலவகைகளில் வேறுபட்டு மிகவும் சிறந்த மொழியாக விளங்குகிறது என்றார். எதையும் எழுத்தாக்கிவிட வேண்டும் என்றும் அப்போதுதான் அக்கருத்து நிலைபேறு உடையதாக இருக்கும் என்றும் கூறினார். பயிற்சியாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ்களை வழங்கி உரையாற்றிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் இந்திய மொழிகளில் இலக்கிய வகைகள் என்னும்போது ஒரு கருத்தை நாம் நினைவு கொள்ளவேண்டும். இலக்கியம் என்பது ஒன்று அது பல மொழிகளில் எழுதப்படுகிறது. இலக்கிய வகைகள் பல தோன்றக் காரணம் பிறமொழித் தாக்கம், பாடுபொருள், யாப்பு, அணி, காலச்சூழல் ஆகியவைகள் இலக்கிய வகைகள் தோன்றக் காரணமாகின்றன என்றார். புதுக்கவிதை பலவித வகைகள் கண்டுள்ளது. பாப்லோ நெருடாவின் புதுக்கவிதை ஒரு வகை என்றெல்லாம் எடுத்துக் கூறினார். மேலும் பல மாற்றங்களையும் சுட்டிக் காட்டினார். முடிவாக தேசியம், மொழி, நாட்டு ஒருமைப்பாட்டுக்கு இலக்கியமும் வகைகளும் அவசியம் என்று கூறினார். முனைவர் இரா.முரளிதரன் நன்றி கூறினார்கள். நாட்டுப்பண்ணுடன் விழா நிறைவு பெற்றது.

– முனைவர் வே.சா.அருள்ராஜ், இந்திய மொழிகள் பள்ளி

## அக்டோபர் 2004 இல்...

| | | |
|---|---|---|
| 01.10.2004 | – | இந்திய மொழிகள் பள்ளி – புத்தொளிப்பயிற்சி தொடக்க விழா |
| 05.10.2004 | – | இலக்கியத்துறை – பாரதியார் அறக்கட்டளை சொற்பொழிவு |
| 11.10.2004 | – | அரிய கையெழுத்துச்சுவடித்துறை – புத்தொளிப்பயிற்சி நிறைவு விழா |
| 12.10.2004 | – | அறிவியல்தமிழ் வளர்ச்சித்துறை – இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம் – கலைச்சொற்கள் தரப்படுத்தம் – பணியரங்கம் |
| 12.10.2004 | – | அகராதியியல்துறை – அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| 21.10.2004 | – | இந்திய மொழிகள் பள்ளி – புத்தொளிப் பயிற்சி நிறைவு விழா |
| 20.10.2004 | – | பதிப்புத்துறை – உட்குழுக்கூட்டம் |
| 21.10.2004 | – | ஆய்வுக்குழுக் கூட்டம் |
| 26.10.2004 | – | தத்துவமையம் – சைவ சித்தாந்தக் கருத்தரங்கு |
| 27.10.2004 | – | மொழியியல்துறை – புத்தொளிப் பயிற்சி தொடக்க விழா |
| 28.10.2004 | – | இசைத்துறை – பண்ணிசைக் கருத்தரங்கம் |

நடைபெற்ற நிகழ்வுகள்

இ.அ.ப. மட்டும் நூலஞ்சல்

# தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்

## இலக்கணமும் அகராதியியலும்

### புத்தொளிப் பயிற்சி




பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதிநல்கையுடன் தமிழ்ப் பல்கலைக்கழக அகராதியியல் துறையின் சார்பில் பல்கலைக்கழக/கல்லூரி ஆசிரியர்களுக்கான புத்தொளிப்பயிற்சி இலக்கணமும் அகராதியியலும் எனும் பொருண்மையில் 25.08.2004 முதல் 14.09.2004 வரையில் நடைபெற்றது. தமிழகம், கேரளம் சார்ந்த தமிழ்த்துறை, ஆங்கிலத்துறை சார் ஆசிரியர்கள் இருபத்தெண்மரும், கணினித்துறைசார் ஆசிரியர் ஒருவருமாக 29 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இந்தப் பயிற்சிக்கு அகராதியியல், இலக்கணவியல், சொற்பொருண்மையியல், மொழிபெயர்ப்பியல், இலக்கண இலக்கிய உரைகள், கணினியியல், கணினிமொழியியல், தகவல்தொடர்பியல், மொழிகற்றல் கற்பித்தல், கலைச்சொல்லகராதியியல், சொற்பிறப்பியல், கன்னட மலையாள இலக்கணவியல்/அகராதியியல் சார்ந்த 32 வல்லுநர்கள் அழைக்கப் பெற்றிருந்தனர். 90 மணித்துளிகள் கொண்ட 62 வகுப்புகளில் மேற்குறித்த பொருண்மைகளில் உரைகள் நிகழ்த்தப்பெற்றன. இந்தப் பயிற்சி இலக்கணம், அகராதி பற்றிய நல்லதொரு விழிப்புணர்வை ஆசிரியர்கள் மனத்தில் ஏற்படுத்தியுள்ளது. புத்தொளிப்பயிற்சியின் தொடக்க விழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக்கழக வளர்தமிழ்ப் புலத்தலைவர், அறிவியல்தமிழ்த் துறைத் தலைவர், பேராசிரியர் முனைவர் கு.அண்ணாதுரை அவர்கள் தலைமைதாங்க, மொழியியல்துறையின் முன்னைப் பேராசிரியர் முனைவர் கி.அரங்கன் அவர்கள் வாழ்த்துரை வழங்க, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறை முன்னைப் பேராசிரியர் முனைவர் அ.அ.மணவாளன் அவர்கள் சிறப்புரையாற்றினார். நிறைவுவிழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல்தமிழ்த் துறை முன்னைப் பேராசிரியர் முனைவர் இராமசுந்தரம் அவர்கள் தலைமைதாங்க, சென்னை மொழி அறக்கட்டளை முதன்மைப் பதிப்பாசிரியர் முனைவர் பா.ரா.சுப்பிரமணியன் அவர்கள் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி நிறைவுவிழாப் பேருரையாற்றினார். இந்தப் பயிற்சியில் பங்கேற்ற கல்லூரி ஆசிரியர்கள் வளர்தமிழ்ப்புலத்தின் சார்பில் அகராதியியல் துறையில் நடைபெற்றுவரும் முதுகலைத்தமிழ் (பயன்பாட்டுத்தமிழியல்) வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி அடையும் மாணவருக்குப் பரிசாக வழங்க ரூ.1500/-ஐ நிறைவுவிழா நாளில் வழங்கினர். கல்லூரி ஆசிரியர்களின் இந்த நல்லெண்ணச் செயற்பாடு புத்தொளிப் பயிற்சிக்குப் புதியதொரு பரிமாணத்தை வழங்கியுள்ளது.

-முனைவர் பெ. மாதையன், அகராதியியல் துறை

## இசை நூல்கள் திறனாய்வு



தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறை பண்ணிசைப் பாதுகாத்தல் அறக்கட்டளை சார்பில் இசை நூல்கள் திறனாய்வு என்னும் பொருளில் கருத்தரங்கு தமிழ்ப் பல்கலைக்கழக மொழிப்புல அரங்கில் 28.10.2004 அன்று முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்றது. கருத்தரங்கிற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையேற்றார். துணைவேந்தரவர்கள் தம்முடைய உரையில் இசை வரலாற்றினை இசை நூல்கள் கொண்டு ஆய்வு செய்வது வருங்காலச் சந்ததியினருக்குப் பேருதவியாக இருக்குமென்று கூறி, இங்கு இசை பயிலும் மாணவர்கள் புகழ் பெற்று விளங்குவதற்கு உரிய சூழல் உருவாகியுள்ளதைக் குறிப்பிட்டுப் பேசினார். சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் இசைத்துறைத் தலைவர் முனைவர் ந.இராமநாதன் தொடக்கவுரை ஆற்றினார். இவர் தம்முடைய உரையில் ஒரு நூலினை மதிப்பீடு செய்வதற்குரிய குறிப்புகளைத் தந்தும், நூலினை மதிப்பீடு செய்வதற்குப் பன்மொழிப் புலமையும், துறை சார்ந்த ஆழ்ந்த அறிவும் தேவை என்றும் கூறினார். முன்னதாக இசைத்துறைத் தலைவர் முனைவர் இ.அங்கயற்கண்ணி கருத்தரங்கின் நோக்கத்தினைக் குறிப்பிட்டு அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இறுதியாக முனைவர் இரா.மாதவி வந்திருந்த அனைவருக்கும் நன்றி கூறினார்.

-முனைவர் இ.அங்கயற்கண்ணி, இசைத்துறை